<u>சுருக்கம்</u>

நிதி – பேரூராட்சிகள் நிர்வாகம் – பல்வேறு திட்டப்பணிகளை மேற்கொள்ள, 2013–14ம் ஆண்டிற்கான உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி தலைப்பின் கீழ் ரூ.29,92,25,000/– மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி தலைப்பின் கீழ் ரூ.19,94,83,000/–ம் நிதி ஒப்பளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை</u>

அரசாணை ( ப ) எண். 382

நாள்.11 –07–2013.
திருவள்ளுவர் ஆண்டு –2044,
ஆனி–27
படிக்கப்பட்டது:–

1) அரசு கடித எண்.11336/ந.நி.II/2013–3 நாள். 07.06.2013.

2) பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–108, ந.க. எண். 2700/2013 /உ4, நாள் 13.06.2013.

------

<u>ஆணை:</u>

பேரூராட்சிகளின் இயக்குநர் மேலே படிக்கப்பட்ட தனது கடிதத்தில், 2013–2014ம் ஆண்டிற்கான உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி தலைப்பின் கீழ் ரூ.29,92,25,000/– மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதித் தலைப்பின் கீழ் ரூ.19,94,83,000/–ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இத்தொகையினை பின்வரும் பணிகள் மேற்கொள்ளுவதற்கு ஏதுவாக நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:–

உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளின் விபரம் :–

| வ. எண் | பணியின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | நிதி ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | 2012–13 ஆம் ஆண்டில் திறந்தவெளியில் மலம் கழித்தலை தடுக்கும் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொண்டது (25 சதவீதம் நிதி ஒதுக்கீடு) (அரசாணை (டி) எண்.264 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை நாள் 15.3.2012) | | | |
| | அ. புதிய கழிப்பிடங்கள் | 160 | 462.65 | 462.65 |
| | ஆ. புதுப்பித்தல் | 221 | 102.35 | 102.35 |
| | மொத்தம் | 381 | 565.00 | 565.00 |
| 2) | அறிவிப்புகள் – பேருந்து நிலையம் | 7 | 825.00 | 825.00 |
| 3) | அறிவிப்புகள் – நவீன எரிவாயு தகனமேடை | 2 | 120.00 | 120.00 |
| 4) | குடிநீர் திட்டப்பணிகள் | 63 | 892.00 | 892.00 |
| 5) | திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் | 16 | 171.95 | 171.95 |
| 6) | மழைநீர் வடிகால் பணிகள் | 8 | 133.30 | 133.30 |
| 7) | அலுவலக கட்டிடம் | 2 | 90.00 | 90.00 |
| 8) | பேருந்து நிலையம் | 2 | 40.00 | 40.00 |
| 9) | சந்தை | 2 | 57.00 | 57.00 |
| 10) | மயானம் | 1 | 18.00 | 18.00 |
| 11) | சமுதாயகூடம் | 2 | 80.00 | 80.00 |
| | மொத்தம் (2+3+4+5+6+7+8+9+10+11) | 105 | 2427.95 | 2427.95 |
| | பெரு மொத்தம் | 486 | 2992.25 | 2992.25 |

**இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளின் விபரம்**

| வ. எண். | பணியின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | நிதிஒதுக்கிடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1) | குடிநீர் திட்ட பணி | 72 | 1057.83 | 1057.83 |
| 2) | திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணி | 13 | 166.00 | 166.00 |
| 3) | சாலை பணி | 7 | 247.00 | 247.00 |
| 4) | மழைநீர் வடிகால் பணி | 8 | 130.00 | 130.00 |
| 5) | பேருந்து நிலைய பணி | 5 | 355.00 | 355.00 |
| 6) | மயானம் | 1 | 20.00 | 20.00 |
| 7) | சமுதாய கூடம் | 1 | 19.00 | 19.00 |
| | மொத்தம் | 107 | 1994.83 | 1994.83 |

2. மேற்படி பேரூராட்சிகளின் இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதன்படி 2013–2014ம் ஆண்டில், உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி தலைப்பின் கீழ் ரூ.29,92,25,000/–ம், மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதித் தலைப்பின் கீழ் ரூ.19,94,83,000/–ம் மேற்சொன்ன பணிகளை மேற்கொள்ள ஏதுவாக, நிதி விடுவித்து அரசு ஆணை வெளியிடுகிறது.

3. மேற்காணும் தொகையினை பெற்று வழங்க பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுமதி மற்றும் அதிகாரம் அளித்து அரசு மேலும் ஆணையிடுகிறது.

4. மேற்படி செலவினங்கள் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படும்:-

**1).உள் கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதித் தொகை ரூ.29,92,25,000/ –**

"3604–00 உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 193 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள் அல்லது அதற்கு சமமான அமைப்புகளுக்கு உதவி I திட்டத்தில் சேராதது AC அடிப்படைக் கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை 09 உதவித் தொகை 02 மூலதன சொத்து உருவாக்குவதற்கான உதவித்தொகை (DPC 3604 00 193 AC 0923)"

**2). இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்புப் நிதித் தொகை .19,94,83,000/–**

"3604–00 உள்ளாட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்–193 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள் அல்லது அதற்கு சமமான அமைப்புகளுக்கு உதவி–I திட்டத்தில் சேராதது AD இயக்க மற்றும் பராமரிப்பு நிதி பற்றாக்குறையை

ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை–09 உதவித்தொகை–02 மூலதன சொத்து உருவாக்குவதற்கான உதவித்தொகை (DPC 3604-00-193-AD-0921)"

5. மேலே பத்தி 2–ல் அனுமதிக்கப்பட்ட தொகையை பெற்று தமிழ்நாடுஅடிப்படை வளர்ச்சி மற்றும் புதுப்பிக்கும் நிதி (PD A/c No.01G03099750BQ)யின் பொது வைப்புக் கணக்கில் வரவு செய்து இந்நிதியினைக் கையாண்டு வரும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை குழுவின் முடிவிற்கேற்ப விடுவிக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அனுமதிக்கப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.33897/MA&WS/2013, நாள் 08.07.2013–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. பணீந்திர ரெட்டி,
அரசுச் செயலாளர்

பெறுநர்
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை –108.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை –1.
மாநில கணக்காயர், சென்னை –18.

<u>நகல்</u>
செயலரின் தனி செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை –108.
நிதி (ந.நி (ம) கு.வ./நிகு–IV / வழிவகை மற்றும் கடன்கள் ) துறை,சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந.2 / பட்ஜெட்) துறை, சென்னை – 9.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

12/7/13
(கா. திருவண்ணாமலை)
அரசு சார்புச் செயலாளர்.